தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
நான்காம் தவணைப் பரீட்சை - 2021

# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 4th Term Examination - 2021

FWC

இலங்கை வரலாறு I
Sri Lankan History I

Three Hours ten min

Gr -13 (2021)

25 | T | I

**கவனிக்க.**
- எல்லா வினாக்களுக்கும் இவ் வினாத்தாளிலேயே விடை அளிக்குக..
- சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுக்க.
- வழங்கப்பட்டுள்ள நேரம் பகுதி I, பகுதி II இற்கும் உரியதாகும்.

## பகுதி – I

❖ இல 1 – 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்கள் ஒன்று ஏதோ ஒரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாத அப்பெயரை இனங்கண்டு அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

1) 1. மஹாவொட்டி 2. மஹாவுடு 3. மஹாபுடு
4. மாதோட்டம் 5. மஹாகாம ( )

2) 1. தீபவம்சம் 2. மஹாவம்சம் 3. சமந்தபாசாதிகா
4. தர்மப்பிரதீபிகா 5. வம்சத்தப்பகாசினி ( )

3) 1. மணிஹீரவாபி 2. காணுவாபி 3. பத்தபாசானவாபி
4. மஹாதாரகல்ல வாபி 5. திஸ்ஸவட்டமானக வாபி ( )

4) 1. லஞ்ஜதிஸ்ஸ 2. சிரிநாக 3. தூலத்தன
4. கல்லாட்டநாக 5. வட்டகாமினி ( )

5) 1. முதல் புளஹத்தன் 2. பிளைய மாறன் 3. பாகிய
4. பல்லுகன் 5. பனயமாறன் ( )

6) 1. தகபதி 2. சுங்கம் 3. தகபக
4. மதரமஞ்சக 5. உதகபதி ( )

7) 1. கந்தவுறு நுவர 2. ஜனநாதபுரம் 3. நயினாதீவு
4. ஜனநாத மங்கலம் 5. புலத்தி நகரம் ( )

8) 1. நியங்கம்பாய 2. ததிகம கோட்டவெயிர 3. திவங்க பிலிமாகே
4. உத்தரராமய 5. தமில்மகாசாய ( )

9) 1. சாம்பனார் கோயில் 2. முன்னேஸ்வரம் கோயில் 3. கணதெவி கோயில்
4. நல்லூர் கந்தசாமி கோயில் 5. திருக்கோயில் ( )

10) 1. பராக்கிரமசமுத்திரம் 2. கவுடுலு வாவி 3. கிரிதலே வாவி
4. கந்தளாய் வாவி 5. மின்னேரிவாவி ( )

- **இல 11 தொடக்கம் 15 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று பொருந்தவில்லை. அச்சோடியைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

11) 1. தூபாராம தாதுகோபம் - தேவநம்பியதீசன்
2. சேருவில தாதுகோபம் - கவந்தீசன்
3. அபயகிரி தாதுகோபம் - வலகம்பா
4. அம்பஸதல சேதியம் - உத்திய
5. கிரிவிகாரை - முதலாம் பராக்கிரமபாகு ( )

12) 1. பண்டுகாபய - சுவர்ணபாலி
2. கல்லாடநாக - அனுலாதேவி
3. நிஸங்கமல்லன் - சுகலாதேவி
4. வலகம்பா - சோமாவதி
5. 1ம் விஜயபாகு - திரிலோக சுந்தரி ( )

13) 1. மகாவலிகங்கை - திருகோணமலை
2. வளவகங்கை - அம்பாந்தோட்டை
3. மாணிக்க கங்கை - கிரிந்த
4. நிலவள கங்கை - காலி
5. தெதுறு ஓயா - சிலாபம் ( )

14) 1. வீரசோழியம் - தமிழ் இலக்கண நூல்
2. பூஜாவலிய - தந்துதாது தொடர்பான சடங்குகள் பற்றிய நூல்
3. சமந்தபாசாதிகா - விநயபிடகம் பற்றிய உரை நூல்
4. பராக்கிரம சிரித - புகழ்ச்சிமிகு கவிதை நூல்
5. கந்தவுறு சிரித - அரசனின் நாளாந்த வாழ்க்கை பற்றிய நூல் ( )

15) 1. போவத்தகல கல்வெட்டு - மாகாண அரசர் வம்சம்
2. சூச்சவேலிக் கல்வெட்டு - மகாயானம் பற்றியது
3. கொடவாய கல்வெட்டு - சுங்க வரிகள்
4. மதிரியாய் கல்வெட்டு - கிராம நிர்வாகம்
5. கோப்பிற்றி கம கல்வெட்டு - உள்ளூர் சந்தை பற்றிய விதிகள் ( )

- **இல 16 – 20 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் X ,Y என நிரல்களில் பொருந்தக்கூடிய வகையில் தொடர்படுத்தும் போது வரும் சரியான சேர்மானத்தின் விடையை இனங்கண்டு அவற்றுக்குரிய இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

16)

| | X | Y |
|---|---|---|
| 1. | வாஜிரியவாத | A. தேவநம்பிய தீசன் |
| 2. | தந்ததாது | B. முதலாம் சேனன் |
| 3. | கேஸதாது | C. கஜபாகு |
| 4. | பத்தினி வழிபாடு | D. சிறிமேகவண்ணன் |
| 5. | போதிமரக்கிளை | E. சிலாகாலன் |

1. BDECA 2. BEDCA 3. BADEC 4. BDCEA 5. BAEDC ( )

17)

| | X | Y |
|---|---|---|
| 1. | சீலவம்ச தர்மகீர்த்தி தேரர் | A. சப்தர்மா லங்காரய |
| 2. | ஜயபாகு தம்பகீர்த்தி தேரர் | B. தேவவாத புராணய |
| 3. | ராஜகுரு தம்பகீர்த்தி தேரர் | C. சரசோதிமாலய |
| 4. | தம்மதின்ன விமலகீர்த்தி தேரர் | D. தாட்ட வம்சம் |
| 5. | தேனுவரைப் பெருமாள் | E. சத்தர்ம ரத்தினாகரய |

1. BADEC 2. BAEDC 3. BDCEA 4. BDECA 5. BEDCA ( )

18) X Y

| | X | | Y |
|---|---|---|---|
| 1. | குருந்தவாவி | A. | இரண்டாம் முகலன் |
| 2. | கங்காதடா வாவி | B. | முதலாம் அக்கபோதி |
| 3. | மணிகீரவாவி | C. | மகாசேனன் |
| 4. | புத்தகுண வாவி | D. | இரண்டாம் அக்கபோதி |
| 5. | பத்தபாசாண வாவி | E. | முதலாம் விஜயபாகு |

1. BADEC 2. BAEDC 3. BDCEA 4. BDECA 5. BEDCA ( )

19) X Y

| | X | | Y |
|---|---|---|---|
| 1. | சூரதிசன் | A. | கரிகால சோழன் |
| 2. | வங்கநாசிக தீசன் | B. | சேன, சூத்திக |
| 3. | முதலாம் சேனன் | C. | முதலாம் ராஜராஜன் |
| 4. | நான்காம் உதயன் | D. | சிறிமார சிறீவல்லபன் |
| 5. | ஐந்தாம் மகிந்தன் | E. | முதலாம் பராந்தகன் |

1. BADEC 2. BAEDC 3. BDCEA 4. BDECA 5. BEDCA ( )

20) X Y

| | X | | Y |
|---|---|---|---|
| 1. | யாப்பகுவ | A. | விஜய கூழங்கைச் சக்கரவர்த்தி |
| 2. | யாழ்ப்பாணம் | B. | முதலாம் புவனேகபாகு |
| 3. | தம்பதெனிய | C. | நான்காம் புவனேகபாகு |
| 4. | குருநாகல் | D. | இரண்டாம் புவனேகபாகு |
| 5. | கம்பளை | E. | மூன்றாம் விஜயபாகு |

1. BADEC 2. BAEDC 3. BDCEA 4. BDECA 5. BEDCA ( )

- **இல 21 – 25 வரையுள்ள எல்லா வினாக்களுக்கும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று உரிய தலைப்பிற்கு பொருந்தவில்லை. அதனைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

21) ரஜரட்ட நாகரிகத்தின் ஓவியங்கள்.
1. சீகிரிய ஓவியங்கள் கி.பி 5 முதல் 7 வரையான நூற்றாண்டுக்குரியவை.
2. திவங்க படி மாகரத்து ஓவியங்கள் பொலன்னறுவைக் காலத்துக்குரியவை.
3. தூபிகளின் தாதுகர்ப்பச் சுவர்களில் ஓவியங்களை வரைவது புராதனகால கலைமரபின் ஓர் அம்சமாகும்.
4. ஹிந்தல ஓவியங்கள் பொலன்னறுவைக் காலத்துக்குரியவை.
5. திம்புலாகல ஓவியங்கள் சக ஜாதகச் சித்திரங்களாகும். ( )

22) நிசங்கமல்லன் எதிர்நோக்கிய சவால்கள்
1. பாண்டியர்கள் அரச உரிமை கோரியமை.
2. கொவி குலத்தவரின் எதிர்ப்பு.
3. பராக்கிரமபாகுவின் மகிமை.
4. நிசங்கமல்லனின் கலிங்கதேச தொடர்பு
5. சோழர் படையெடுப்பு ( )

23) முதலாம் பராக்கிரமபாகுவின் அயல்நாட்டுத் தொடர்புகள்.
1. பர்மா மீது படையெடுப்பு.
2. தென்னிந்தியாவில் பாண்டிய இராச்சியத்திற்கு எதிரான படையெடுப்பு.
3. காம்போஜத்தோடு நல்லுறவுகள்.
4. தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் சமய நல்லுறவுகள்.
5. சீனாவுடன் வர்த்தக நல்லுறவுகள். ( )

24) கம்பளை இராச்சியம்
1. இக்காலத்தில் கவிசிலுமின எழுதப்பட்டது.
2. சேனாதிலங்காதிகாரிகள் அழகக்கோனார் ஆகியோரின் வம்சத்தவரே இக்கால பிரதானிகள் குடும்பங்களில் மிகுந்த அதிகாரம் கொண்டவர்கள்.
3. கம்பளை இராச்சியத்தின் சில பகுதிகள் மீது ஆரியச்சக்கரவர்த்தி அரசர்கள் படையெடுத்தமைக்கு ஆதாரம் உண்டு.
4. மகவல, லங்காதிலக ஆகிய இடங்களிலுள்ள சாசனங்கள் இக்காலத்துக்குரியவை.
5. கடலாதெனியாவிலுள்ள கடலாதெனிய விகாரை கணேஸ்வராச்சாரியாரினால் நிர்மானிக்கப்பட்டது. ( )

25) சீத்தாவாக்கை இரசதாணி
1. 1521 விஜேபாகு கொள்ளையின் (விஜயபா கொல்லய) பின்னர் தோற்றம் பெற்றது.
2. மாயாதுன்னை இதன் முதல் ஆட்சியாளன்.
3. றைகம பண்டாரவின் மரணத்தின் பின் றைகம சீத்தாவாக்கை இராசதானியுடன் இணைக்கப்பட்டது.
4. 1582 இல் சீத்தாவாக்கை இராசதானியுடன் கண்டியப் பிரதேசங்கள் இணைக்கப்பட்டன.
5. 1619 இல் சீத்தாவாக்கை இராசதானியுடன் யாழ்ப்பாண இராசதானி இணைக்கப்பட்டன.
( )

- **இல 26 – 30 வரையுள்ள ஒவ்வொன்றிற்கும் (A) (B) (C) (D) என்னும் நான்கு விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடைகளும் சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவு செய்க.**

(A) யும் (B) மட்டும் சரியாயின் 1 எனவும்
(B) யும் (C) மட்டும் சரியாயின் 2 எனவும்
(C) யும் (D) மட்டும் சரியாயின் 3 எனவும்
(A) யும் (C) மட்டும் சரியாயின் 4 எனவும்
ஒரு விடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் 5 எனவும் புள்ளிக்கோட்டில் எழுதுக.

| **அறிவுறுத்தல்களின் சுருக்கம்** | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| (A) யும் (B) யும் மட்டும் சரி | (B) யும் (C) யும் மட்டும் சரி | (C) யும் (D) யும் மட்டும் சரி | (A) யும் (C) யும் மட்டும் சரி | ஒரு விடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரி |

26) சமய வரலாற்றில் மகாசேனன் தொடர்பாக பின்வரும் குறிப்பு / குறிப்புக்களில் எது / எவை சரியானது சரியானவை?
A) வைதுல்யக் கோட்பாட்டை அறிமுகஞ் செய்தமை.
B) அநுராதபுரத்தில் மிகப் பெரும்சேத்தியதை (தூபியைக்) கட்டியவன் என்ற சிறப்பு மகாசேனனுக்குரியது.
C) அபயகிரி தாதுகோபத்தைக் கட்டியமை.
D) அவனுடைய காலத்தில் தேரவாத திரிபீடகம் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது. ( )

27) நீர்ப்பாசன அபிவிருத்தி தொடர்பாக பின்வருவனவற்றுள் எது / எவை சரியானது / சரியானவை?
A) பெருங்குளங்களை அமைத்த சிங்கள மன்னரில் முதலாம் வசபன் முதலானவன்.
B) இலங்கையின் நீர்ப்பாசன வரலாற்றில் எலஹா, மின்னேரி, கவுடுலுலு இணைப்புத் திட்டமானது ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கமாகும்.
C) கலாவாவி என்னும் பெருங்குளத்தை மகாசேனன் கட்டினான்.
D) முதலாம் விஜயபாகு அரசன் மினிப்பே திட்டத்தை உருவாக்கினான். ( )

28) உருகுணையை இணைப்பதற்கு கவந்தீசன் மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?
A) திருமண உறவுகள்
B) இராணுவ நடவடிகடகை மூலமான கைப்பற்றல்கள்.
C) சமய நடவடிக்கைகள்.
D) ஒற்றாடல் ( )

29) வலகம்பாகுவின் ஆட்சி தொடர்பான மேல்வரும் கூற்றுக்களில் எது / எவை சரியானது / சரியானவை?
A) இளவரசியான ஹேமமாலா புனித தந்ததாதுவை இலங்கைக்கு கொண்டு வந்தாள்.
B) ஏழு தமிழ்ப் பிரதானிகள் இலங்கை மீது படையெடுத்தனர்.
C) திரிபிடகம் எழுதப்பட்டது.
D) மோரியருக்கும் லம்பகர்ணருக்கும் இடையிலான தகராறு ஆரம்பித்தது. ( )

30) முதலாம் விஜயபாகுவின் சாதனைகள் தொடர்பான மேல்வரும் கூற்றுக்களில் எது / எவை சரியானது / சரியானவை?
A) இலங்கையினை ஒன்றாக இணைத்தமை.
B) உபசம்பதா சடங்கின் மூலம் சங்கம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டமை.
C) காலிங்க மாகானைத் தோற்கடித்தமை.
D) திபெத் நாட்டுடன் சமய உறவுகளைத் தொடர்ந்து பேணியமை. ( )

- **இல 31 – 35 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அடைப்புப் புள்ளிக்கோட்டில் அதன் இலக்கத்தை எழுதுக.**

31) எலும்புகளை அடக்கம் செய்யும் முன்னர் சேற்றுக்கல் (சிவப்புசாயம்) பூசப்பட்டமை தொடர்பில் ஆதாரங்கள் கிடைக்கப்பெற்ற இடம் எது?
1. பெல்லன்பதி பெலஸ்ஸ 2. பாகியன்கல 3. மினிஹால்கந்த
4. இப்பன்கட்டுவ 5. பட்டதொம்பலன ( )

32) விஜிதபுரத்தின் வீழ்ச்சியின் பின்னர் எல்லாள மன்னனுக்கு உதவி புரிவதற்காக தென்னிந்தியாவிலிருந்து வந்த பிரதானி யார்?
1. பல்லூக 2. தீகஜந்து 3. புளஹத்த
4. பனயமாற 5. தாட்டிக ( )

33) தொட்டகமுவ ஸ்ரீ ராகுல தேரர் எழுதிய சந்தேஸ காவியம் யாது?
1. திஸர சந்தேஸ 2. மயூர சந்தேஸ 3. கோகில சந்தேஸ
4. சளலிஹினி சந்தேஸ 5. கிராசந்தேஸ ( )

34) கந்தளாய்க் குளத்தைக் கட்டியவர் யார்?
1. இரண்டாம் முகலானன் 2. இரண்டாம் அக்கபோதி 3. இரண்டாம் மகிந்தன்
4. இரண்டாம் சேனன் 5. இரண்டாம் உதயன் ( )

35) இரண்டாம் கஜபாகுவிற்கும் முதலாம் பராக்கிரமபாகுவிற்ம் இடையிலேற்பட்ட உடன்படிக்கையின் வாசகத்தைக் கொண்டுள்ள சாசனம் யாது?
1. சிதம்பரம் கல்வெட்டு 2 சாம்பனார் கோயில் கல்வெட்டு
3. தேவநகல கல்வெட்டு 4. சங்கமு விகாரைக் கல்வெட்டு
5. கல்விகாரைக் கல்வெட்டு ( )

- ***இல 36 – 40 வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுக்கள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிகளுக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் 1, 2, 3, 4, 5 என்பவற்றில் மிகவும் பொருந்துவதை எதுவென்பதைத் தெரிந்து அதன் இலக்கத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.***

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| 1. | சரியானது | பிழையானது |
| 2. | சரியானது | சரியானது |
| 3. | பிழையானது | பிழையானது |
| 4. | பிழையானது | சரியானது |
| 5. | சரியானது | சரியானதும் முதல் கூற்றினை நன்றாக விளக்குவதாகும். |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 36) | சத்தாதிஸ்ஸனுடைய ஆட்சியில் பௌத்த சங்கத்திலே முதலாவது பிளவு ஏற்பட்டது. | முதலாம் விஜயபாகு சங்கத்தாரை ஐக்கியப்படுத்தியதோடு கதிகாவத என்னும் விதிக்கோவை ஒன்றினையும் பிரகடனப்படுத்தினான். ( ) |
| 37) | முதலாவதாக வந்து இந்து ஆரியர் மாதோட்டத்தில் இறங்கி மல்வத்து ஓயா, கலாஓயா என்பவற்றின் கரையோரங்களில் நிலை கொண்டனர். | கோகர்ணத் துறைமுகத்தில் வந்திறங்கிய ஆரியக் குடியிருப்பாளர் மகாவலி ஆற்றங்கரையில் நிலை கொண்டனர். ( ) |
| 38) | இலங்கையை ஒன்றிணைப்பதற்கான துட்டகாமினியின் போருக்கு கவந்தீசன் வழி அமைத்தான். | கவந்தீசன் படையொன்றைத் திரட்டி அதற்குப் பயிற்சியளித்ததோடு ஆயுத உற்பத்திச்சாலைகளை நிறுவியதோடு மகாவலி ஆற்றங்கரையில் கேந்திர நிலையங்களை அமைத்தான். ( ) |
| 39) | காசியப்ப மன்னன் "சிகிரியா" என்னும் பலம் வாய்ந்த கோட்டையை கட்டுவித்தான். | இவன் மிகார என்னும் தளபதியின் ஆலோசனையின் பெயரில் இதனை பாதுகாப்புக்காக அமைப்பித்தான். ( ) |
| 40) | நிசங்கமல்லனுடைய உறவினருக்கு வழங்கப்பெற்ற சிறப்புரிமைகள் பனாக்கடுவ செப்பேட்டிற் பதிவாகி உள்ளன. | நிசங்கமல்லனுடைய கல்பொத கல்வெட்டு அவனது, குடிகளை அமைதிப்படுத்திச் சமாதானப்படுத்தும் நோக்கத்தோடும் காலிங்க வம்சத்திற்கு அவர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்தோடும் எழுதப்பெற்றது. ( ) |

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

**நான்காம் தவணைப் பரீட்சை - 2021**

**Conducted by Field Work Centre, Thondaimanaru.**

**4th Term Examination - 2021**

**இலங்கை வரலாறு II**

**Sri Lankan History II**

**Gr -13 (2021)**

**25 | T | II**

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **அத்துடன் பகுதி B இலிருந்து ஒரு வினாவையேனும் பகுதி C இலிருந்து ஒரு வினாவையேனும் தெரிவு செய்து எல்லாமாக மூன்று வினாக்களுக்கு விடை தருக. (முதலாம் வினா உட்பட விடையளிக்க வேண்டிய வினாக்களின் மொத்த எண்ணிக்கை நான்கு ஆகும்).**
- **முதலாம் வினாவுக்கு விடை அளிப்பதற்கு இலங்கையின் புறவுருவப்படம் வழங்கப்படும்.**

## பகுதி A

01) உமக்கு வழங்கப்பட்டுள்ள புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்ட அனைத்து இடங்களையும் குறித்து பெயரிடுக.

| | | |
|---|---|---|
| 1. வளவை கங்கை | 2. ஊராத்தோட்டை | 3. களனிய |
| 4. நாச்சதூவ வாவி | 5. குருணாகல் | 6. யாப்பகூவ |
| 7. யான் ஓயா | 8. சேருவில் | 9. ஜம்புகோள பட்டணம் |
| 10. தெவிநுவர | 11. மத்திய மாகாணம் | 12. கலாவாவி |

(12x1=12 புள்ளிகள்)

## பகுதி B

02) ''மகாவம்சம் மகாவலிகாரையின் புராணமாகும்''

1) மகாவம்சத்திற்கு எழுதப்பட்ட உரையினைப் (டீகா) பெயரிடுக. (1 புள்ளி)

2) மகாவிகாரைக்கு உரித்தான பிரதான உபோசதகர, பிரதான தூபி ஆகியவற்றின் பெயர்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

3) மகாவம்சத்தில் உள்ளடங்கியுள்ள மகாசேனனது ஆட்சியின் இறுதிக் காலம் வரையுள்ள அரசியல் வரலாறு தொடர்பான தகவல்கள், கல்வெட்டு ஆதாரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படுமாற்றைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

4) மகாசேனனது ஆட்சியின் இறுதிக் காலம் வரை மகாவிகாரையின் புராணமாக மகாவம்சத்தைக் கருதுவது எந்தளவு ஏற்புடையதாகும்? (8 புள்ளிகள்)

03) ''அநுராதபுர காலத்துப் பொருளாதார முறையின் பிரதானமான அம்சங்களை மேல்வரும் தலைப்புக்கள் தொடர்பாகப் பரிசீலனை செய்க''

1) விவசாயமும் நீர்ப்பாசனமும்

2) வாணிபம்

(16 புள்ளிகள்)

04) வட்டகாமினி அபயனின் ஆட்சிக் காலத்தின் முக்கியத்துவத்தை மேல்வரும் தலைப்புக்களின் கீழ் பரிசீலனை செய்க.

1) அரசன் எதிர்நோக்கிய வெளிநாட்டுச் சவால்களும் அவற்றைக் கட்டுப்படுத்திய விதமும்.
2) அபயகிரி விகாரை நிறுவப்பட்டமை.
3) திரிபிடகம் எழுத்து வடிவம் பெற்றமை.

(16 புள்ளிகள்)

05) பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1) சோழப்படையெடுப்பு
2) எல்லாள மன்னன்.
3) காவந்தீசன்
4) வசபன்

(8x2=16 புள்ளிகள்)

## பகுதி C

06) "முதலாம் விஜயபாகு பொலன்னறுவைக் காலத்துப் பெருமன்னன் ஒருவனாவான்" முதலாம் விஜயபாகுவின் சாதனைகளையும் பெருஞ்சிறப்பினையும் மேல்வரும் அம்சங்கள் தொடர்பாகப் பரிசீலனை செய்க.

1) அந்நியராட்சியிலிருந்து நாட்டினை மீட்டு அதனை ஒன்றிணைத்தமை.
2) நீர்ப்பாசனத் திட்டங்களின் புனரமைப்பு.
3) பௌத்த சமய மறுமலர்ச்சி

(16 புள்ளிகள்)

07) "ஆரம்பத்திலிருந்து 1619 வரை, யாழ்ப்பாண இராச்சியத்தின் அரசியல் வரலாற்றிலுள்ள பிரதான கட்டங்களை ஆராய்க.

(16 புள்ளிகள்)

08) மகா பராக்கிரமபாகுவின் பின்னர் பொலன்னறுவை அரசில் நிஸங்கமல்லனே முக்கியமானவன்?

1) நிசங்கமல்லனின் வம்ச பெயரைக் குறிப்பிடுக. (1 புள்ளி)
2) நிசங்கமல்லன் கட்டிய மூன்று கட்டிடங்களின் பெயர்களைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
3) நிசங்கமல்லன் எதிர்நோக்கிய சவால்கள் எவை? (4 புள்ளிகள்)
4) மகாபராக்கிரமபாகுவிற்கு பின்னர் பொலன்னறுவை மன்னர்களில் நிசங்க மல்லனே மிக முக்கியமானவன் என்ற கூற்றை நுணுக்கமாக பரிசீலனை செய்க. (8 புள்ளிகள்)

(8x2=16 புள்ளிகள்)

09) பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1) சந்திரபானு
2) மூன்றாம் விஜயபாகு
3) குருநாகல் காலத்து இலக்கியம்
4) கோட்டை கால இலக்கியங்கள்

(8x2=16 புள்ளிகள்)

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
நான்காம் தவணைப் பரீட்சை - 2021

**Conducted by Field Work Centre, Thondaimanaru.**

**4th Term Examination - 2021**

இலங்கை வரலாறு

